வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=




# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  05.05.2025 திங்கட்கிழமை  இதழ் : 126  பக்கங்கள் : 12

## நாளை உள்ளூராட்சி தேர்தல்:

# வாக்களிக்க ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கவேண்டும்

## அரச, தனியார் நிறுவனங்களுக்கு தேர்தல்கள் ஆணையர் அறிவிப்பு

- வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்கலாம்
- வேட்பாளர்கள் பொறுப்புடன் நடக்கவேண்டும்

கொழும்பு, மே 05

அரச மற்றும் தனியார் துறையினர் வாக்களிக்க செல்வதற்கு போதுமான விடுமுறை வழங்குவது அத்தியாவசியம். விடுமுறை விதிமுறைகளை மீறுகின்ற அல்லது அதன்படி நடக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

11

## தமிழ் மக்களின் நகைகளை அவர்களிடமே ஒப்படைக்குக

### செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

வவுனியா, மே 05

எமது மக்களின் முதலீடாகவும் அவர்களின் கலாசார அடையாளமாகவும் காணப்படும் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரியவர்களிடமே ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வன்னி இறுதிப்போரின்போது புலிகளிடமிருந்து கைப்பற்றியவை என்று கூறப்படும் தங்க நகைகளை பரிசீலித்து உரியவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் கூறியுள்ளது. இந்த நிலையில், இது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன்

11

## போராட்டங்களால் ரூ. 300 கோடி இழப்பு!


கொழும்பு, மே 05

கடந்த 10 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களால் நாட்டுக்கு சுமார் 300 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சு முன்னெடுத்த ஆய்வில் இந்த விடயம் வெளிப்பட்டதாக பேராதனை பல்கலைக்கழக பொருளியல் விஞ்ஞானப் பீடத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

2001 முதல் 2022ஆம் ஆண்டு வரை 386 போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக 6 இலட்சத்து 62 ஆயிரத்து 388 வேலை மணித்தியாலங்கள் செலவிடப்பட்டன. வருடாந்தம் சுமார் 35

11



## மின்சார கட்டணம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, மே 05

எதிர்வரும் ஜூலை மாதம் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்படும். அப்போது, மின் கட்டணம் அதிகரிக்கப்படலாம். எனினும் அதிகளவான சதவீதத்தில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணம் அதிகரிக்கப்படுமா என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், வலுசக்தியின் பாதுகாப்பு தேசிய பாதுகாப்பின் பிரதான அம்சமாகும். வலுசக்தியில் சுயாதீனத் தன்மை இல்லையாயின், தேசிய

11

## புலிகளிடம் மீட்ட நகைகள் முஸ்லிம் மக்களுடையதாம்

### அவர்களிடமே வழங்குமாறு அநுரவுக்கு கடிதம்

கல்முனை, மே 05

விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகளில் அதிகமானவை வடக்கு முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப்பட்டவை. இதனால், அந்த நகைகளை அரசாங்கம் முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டும் என்று சிறீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கூறியுள்ளது.

ஜனாதிபதி அநுர குமாரவுக்கு அந்தக் கட்சியின் நிறுவுநர் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 1990ஆம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்களு டன் இரண்டற கலந்து வாழ்ந்த முஸ்லிம்களை இன ரீதியாக பிரித்து விடுதலைப் புலிகள்

11

## ஆஸி. பாராளுமன்ற தேர்தலில் ஈழத்தமிழரான அஷ்வினி வெற்றி!

### ஆட்சி மீண்டும் தொழில் கட்சியிடம்



சிட்னி, மே 05

அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தலில் ஈழத் தமிழ் வம்சாவழி பெண்ணான அஷ்வினி அம்பிகை பாகர் வெற்றி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய பாராளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், ஆளும் கட்சியான தொழில் கட்சி சார்பில் நியூ சவுத்வேல்ஸின் பார்ட்டன் தொகுதியில் அஷ்வினி அம்பிகைபாகர் போட்டியிட்டார். 66 சதவீத வாக்குகளை பெற்ற அவர் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளார்.

அஷ்வினி அம்பிகைபாகர் ஈழத்தின் புகழ்பூத்த குழந் தை கவிஞரான அம்பி என்று அறியப்பட்ட அம்பிகை பாகரின் பேர்த்தியாவார். சட்ட

11

## பருத்தித்துறை கடற்கரையில் பெண்ணின் சடலம் ஒதுங்கியது

வடமராட்சி, மே 05

பருத்தித்துறை கடற்கரையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்கப்பட்டது.

பருத்தித்துறை - மூர்க்கம் கடற்கரையில் மீட்கப்பட்ட இந்த சடலம், தும்பளை கிழக்கை சேர்ந்த சிவராசா சத்தியவதி (வயது 36) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வசிக்கிறார். இந்த நிலையில், மகனுடன் வசித்து வந்த பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயாளன் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## யாழ். ஜனாதிபதி மாளிகையை வாடகைக்கு எடுப்பதில் போட்டி

கொழும்பு, மே 05

காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை வாடகைக்கு எடுப்பதற்கு 5 முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர் என்று நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகைகளை வாடகைக்கு எடுக்க 10 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில், காங்கேசன் துறையிலுள்ள ஜனாதிபதி மாளிகையை பெறுவதற்கு கனடாவை சேர்ந்த முதலீட்டாளர் ஒருவர் உட்பட 5 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

அந்த மாளிகையில் தொழில்நுட்ப

11

## தேர்தல் கடமைகளில் 65 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு, மே 05

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 65 ஆயிரம் பொலஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவைப்பட்டால் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும் - என்றும் அவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

## பதில் அரச அதிபர் அறிவிப்பு

கிளிநொச்சி, மே5

**2025ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்டத்தின் 3 பிரதேச சபைகளுக்குமான தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 387 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். 108 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது.

வாக்கெண்ணும் பணிகள் 40 நிலையங்களில் முன்னெடுக்கப்படும்.

ஆயிரத்து 450 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர். மாற்றுவலுவுள்ளோருக்கான ஏற்பாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தனியார் துறைகளில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு சட்ட விதிகளுக்கு அமைய நிறுவனங்களின் தலைவர்கள் விடுமுறைகளை வழங்கி தமது ஊழியர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்து மாறும் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் சுயாதீனமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் இதன்போது கேட்டுக் கொண்டார்.

(ஐ)

# மணல் கடத்தல்காரரால் உயிருக்கு அச்சுறுத்தல்!

## ஊடகவியலாளர் பொலிஸில் முறைப்பாடு

தென்மராட்சி, மே 05

சாவகச்சேரியில் மணல் கடத்தலில் ஈடுபடுபவர்களால் தனக்கு தொடர்ச்சியாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சுயாதீன ஊடகவியலாளர் த. சுபேசன் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் அண்மையில் தனது தந்தைக்கு விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் இதன் பின்னர் இரவு வேளையில் தொலைபேசி மூலமாக ஊடகவியலாளருக்கு அழைப்பு ஏற்படுத்தி பணம் கேட்டு மிரட் டினர் எனவும் இந்த விடயங் களை வெளியில் தெரிவித்தால் விபத்தை ஏற்படுத்துவோம் என்றும் கூறி மிரட்டினர் என்றும் ஊடகவியலாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

(ஐ-02)



# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி ஆய்வு நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 05

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வுகள் அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் கலாநிதி எஸ். கே பிரபாகரன் எழுதிய "கல்வி ஆய்வு அடிப்படைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் அதிபர் தில்லையம்பலம் வரதன் தலைமையில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்கள் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கணேசப்பிரியா பிரபாகரன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார். மதிப்பீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் ஆற்றினார்.

நிகழ்வில் கல்வி சமூகத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர்.

(ஐ)

# உள்ளூராட்சி தேர்தலில் 4,000 கண்காணிப்பாளர்

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

கொழும்பு, மே 05

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் சுமார் 4 ஆயிரம் தேர்தல் கண்காணிப்பாளர்களை பவ்ரல் அமைப்பு பணியில் ஈடுபடுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபட மாட்டார்கள் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் நாடு முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக நாடு முழுவதும் சுமார் 3 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் பவ்ரல் அமைப்பால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக 800 இற்கும் மேற்பட்ட நடமாடும் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

(ஐ)

## முல்லைத்தீவிலும் கேகாலையிலும்

# இரண்டு கட்சிகளின் சார்பில் ஒருவரே வேட்பாளராக போட்டி!

முல்லைத்தீவு, மே 05

உள்ளூராட்சி தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் இரு வெவ்வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் ஒருவரின் பெயர் இடம் பெற்றுள்ள இரு சம்பவங்கள் தெரியவந்துள்ளன.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச சபைக்கு இரு அரசியல் கட்சிகளின் சார்பில் ஒரு நபர் போட்டியிடுகிறார் என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

இதேபோன்று, கேகாலை - யட்டியந்தோட்ட பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இரு கட்சிகளில் போட்டியிடுகிறார். அவர் இரு கட்சிகளின் சார்பிலும் பிரசார சுவரொட்டிகளை தயாரித்து வெளியிட்டமையும் தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்கா கூறுகையில்,

இரண்டு வெவ்வேறு கட்சிகளில் இருந்து வாக்களிக்கப்பட்ட ஒருவர் உள்ளூராட்சி மன்றத்தில் அமர்வதற்குத் தகுதியற்றவர். அவர் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் உறுப்பினராக அமர்வதைத் தடுக்க சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

(ஐ)

# பாய் டின் விகாரையில் ஜனாதிபதி வழிபாடு!





கொழும்பு, மே 05

வியட்நாமுக்கு சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய பௌத்த விகாரைகளில் ஒன்றான பாய் டின் விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

இலங்கை மற்றும் வியட்நாம் தேசியக் கொடிகளை ஏந்திய வியட்நாம் மக்களால் ஜனாதிபதிக்கு அதன் நுழைவாயிலில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

விகாரை வளாகத்தை சுற்றிப் பார்த்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை காண வீதியின் இருபுறமும் ஏராளமானோர் கூடியிருந்தனர், மேலும், அவர்கள் இரு நாடுகளின் தேசியக் கொடிகளையும் அசைத்து தமது மரியாதையை செலுத்தினர்.

ஜனாதிபதி, விகாரையில் வழிபாடு நடத்திய பிறகு, தேரர்கள் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசிர்வதித்தனர். பின்னர், ஜனாதிபதி விகாரை வளாகத்தில் அமைந்துள்ள சிறீ மகா போதியை வழிபட்டதுடன், இந்த போதி, 2023ஆம் ஆண்டு பாய் டின் விகாரை வளாகத்தில் நடுவதற்காக இலங்கையிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட அநுராதபுரம் சிறீ மகா போதியின் ஒரு கிளையாகும்.

இலங்கை மத்திய கலாசார நிதியத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலின் கீழ் போதியை சுற்றி நிர்மாணிக்கப்பட்ட மதிலையும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திறந்து வைத்தார்.

பின்னர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க விகாரை வளாகத்தில் சால் மரக்கன்றை நட்டார். இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்ட பெயர்ப் பலகையையும் பார்வையிட்டார். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் விகாராதிபதிக்கு நினைவுப் பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஐ)

# குளத்தில் நீராடிய சிறுவன் மரணம்!

கிளிநொச்சி, மே 05

கரியாலை நாகபடுவான் குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கிளிநொச்சி பூநகரி கரியாலை நாகபடுவான் குளத்தில் [illegible] 16 வயதான 4 சிறுவர்கள் நேற்று முன்தினம் சென்றுள்ளனர்.

இதில், ஒரு சிறுவன் காணாமல் போனார். அந்தப் பகுதியினர் நீண்டநேரம் நடத்திய தேடுதலில் அவரின் சடலம் மீட்கப்பட்டது

மீட்கப்பட்ட சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

முழங்காவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.05.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 22

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வாக்களிப்பில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

போருக்குப் பின்னரான தேர்தல்களை எடுத்து நோக்கினால் தமிழ் மக்களின் வாக்களிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் உடனடியாகக் காணப்பட்ட உணர்வுநிலை படிப்படியாக கீழ்நிலைக்கு சென்றிருக்கிறது. யுத்தம் முடிவுற்றதும் மக்களுக்கு முன்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஒரேயொரு தெரிவாக இருந்தது. மக்களும் நம்பிக்கையுடன் வாக்களித்தனர். கூட்டமைப்பு ஓர் ஏக தலைமை என்னும் தகுதிநிலையைப் பெற்றிருந்தது. இந்த நிலைமை தற்போது இல்லை.

இன்று தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தமை தொடர்பில் அரசியல் கடசிகளின் தலைவர்கள் என்போர் அதிகம் பேசி வருகின்றனர். பாராளுமன்றத் தேர்தலில் தவறிழைத்ததுபோன்று உள்ளூராட்சி தேர்தலில் தவறிழைத்து விடக்கூடாது என்று கூறுகின்றனர். ஆனால், 2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கூறியவர்கள் யார்? பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் பகுதிகளில் பிரசாரம் செய்தவர்கள் யார்?

2010இல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்த மக்கள் 2024இல் அநுரவுக்கு வாக்களித்ததை - அதனைத் தொடர்ந்து வந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்களித்ததை - எந்த அடிப்படையில் தமிழ் கட்சிகள் விமர்சிக்க முடியும்? தவறு என்று கூற முடியும்? - ஏனெனில், அந்த வழியைக் காட்டியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தானே - முக்கியமாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி.

வடக்கு, கிழக்கை தங்களின் வரலாற்று வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக தமிழ் பாரம்பரிய கட்சிகளுக்கே வாக்களித்து வந்திருக்கின்றனர். குறிப்பாக, இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்ட பின்னர், அதனையே பிரதானமாக ஆதரித்தனர். பின்னர், அதன் தொடர்ச்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் பின்னர், வீட்டுச் சின்னத்தின் கீழ் அணி திரட்டப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமே வாக்களித்திருக்கின்றனர்.


இந்த வாக்களிப்பிலிருந்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக விலகியதில்லை. ஆனால், அண்மைக்காலமாக இந்த வாக்களிப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் தங்களின் பாரம்பரிய வாக்களிப்பு சிந்தனையிலிருந்து வெளியேறி வருகின்றனர். இதற்கு தலைமுறை இடைவெளியும் ஒரு பிரதான காரணமாகும். இளைய தலைமுறை அரசியலில் புதுமையை விரும்புகிறது. அதேவேளை, கவர்ச்சியையும் விரும்புகிறது. ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அவ்வாறான கவர்ச்சியை ஏற்படுத்துவதில் முதல் நகர்வில் வெற்றி பெற்றிருக்கிறது. இதன் விளைவே, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் தேசிய மக்கள் சக்தியை நோக்கிச் சாயும் நிலைமை உருவாகியது. ஆனால், இந்த நிலைமை நிரந்தரமானதல்ல.

தமிழ் மக்கள் வாக்களிப்பில் மாற்றி யோசிப்பது சரியானதா அல்லது தவறானதா? நிச்சயமாக சரியானது. பாரம்பரியமாக ஒரு கட்சிக்கு வாக்களிக்கும் நிலைமையில் மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். ஏனெனில், தமிழ் மக்களை பாரம்பரியமாக பிரதிநிதித்துவம் செய்துவரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை அரசியல் அடைவை நிரூபிக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது பாரம்பரிய தமிழ் கட்சிகளுக்கு மாற்றாக புதிய தமிழ் கூட்டணிகளும் ஒரு தெரிவாக இருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் தமிழ் மக்கள் சிந்திக்க முடியும் - தொடர்ந்தும் தோல்வியின் பாதையில் பயணித்த பாரம்பரிய தமிழ் கட்சிகளுடன் தொடர்ந்தும் பயணிப்பதா அல்லது புதிய தமிழ் கூட்டணிகளுக்கும் ஒரு வாய்ப்பை வழங்குவதா - எது சரியானது?

சிங்கள மக்கள் பாரம்பரிய கட்சிகளை ஆதரித்து வந்த போதிலும் தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி புதியவர்களை அரங்குக்கு கொண்டு வந்திருக்கின்றனர். பாரம்பரிய சிங்கள கட்சிகள் முற்றாகவே அரசியல் அரங்கில் இல்லாமல் போயிருக்கின்றன. அவ்வாறான அரசியல் நிலைமை ஏன் தமிழ்ச் சூழலில் ஏற்படக்கூடாது? இந்த அடிப்படையிலும் தமிழ் மக்கள் சிந்திப்பதற்கான அரசியல் சூழல் முன்னரை விடவும் இப்போது கனிந்திருக்கிறது. ஆனால், அந்த மாற்றம் தமிழர் அரசியல் பரப்புக்குள்தான் இருக்க வேண்டும். அப்போதுதான், அது தமிழர் அரசியல் மாற்றமாக இருக்கமுடியும்.

## உள்ளூராட்சி தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் யாழில் பதில் அரச அதிபர் நேற்று கள ஆய்வு



*யாழ்ப்பாணம், மே 05*

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக வாக்குப் பெட்டிகளை அனுப்பும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில், மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புகள் குறித்து யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் நேற்றுக்காலை கள ஆய்வை மேற்கொண்டார்.

இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவும் கலந்து கொண்டு தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இக்கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கள ஆய்வில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோரும் பங்குபற்றினர். (எ)

## அதிவேக வீதியில் நிறுத்தப்பட்ட பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

*கொழும்பு, மே 05*

தெற்கு அதிவேக வீதியில் வெலிப்பன பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிவேக வீதி பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

வீதிப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ், அதிவேக வீதியில் வாகனங்களை நிறுத்தி வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும், அவசரகாலச் சூழ்நிலையில் மட்டுமே நிறுத்த அனுமதிக்கப்படும்.

எனினும், ஆபத்துக்களை தடுப்பதற்கு, பொலிஸ் உத்தரவுகள், வாகன பழுதடைதல் அல்லது விபத்துகள் உள்ளிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே அதிவேக வீதியில் வாகனங்கள் நிறுத்த அனுமதிக்கப்படுகிறது.

வெலிப்பன அதிவேக வீதியில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களை நிறுத்த போதுமான இடவசதி இல்லை என அதிவேக வீதி செயல்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு காலி முகத்திடலில் மே முதலாம் திகதி நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பேரணிக்கு வந்த பஸ்களின் எண்ணிக்கையும், மே தின கூட்டங்களுக்குப் பின்னர் கொழும்பை விட்டு வெளியேறிய பஸ்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்ததால் அவற்றை நிறுத்த முடியவில்லை.

வாகன நிறுத்துமிடத் தேவைகளில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால், இன்னும் இரண்டு அல்லது மூன்று அதிவேக வீதி சேவைப் பகுதிகள் இருந்தால் நன்மையளிக்கும் என அதிவேக வீதி முகாமைத்துவப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)

## காங்கேசன்துறை கடற்கரை பூங்கா புனரமைப்பு தொடர்பில் அவதானம்

*யாழ்ப்பாணம், மே 05*

2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை கடற்கரைப் பூங்காவுக்கு யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று முன்தினம் களப்பயணம் செய்தார்.

காங்கேசன்துறை கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவின் ஒரு பகுதி கடுமையான கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்துக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனால் அதனை விரைவாக புனரமைப்புச் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது. இந்த நிலையிலேயே பதில் அரசாங்க அதிபர், கடற்கரை பூங்காவுக்கு சென்று பார்வையிட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சால்

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 131.20 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 05 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 22
நல்ல நேரம்:6.00 - 7.00
ராகு காலம்:7.30 -9..00
திதி: நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் அலைச்சல் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

**இடபம்**
குடும்பத்தில் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். இனிமையான நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்புகூடும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர், தடைகள் ஏற்படும் நாள்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

**மீனம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

# மன்னாரில் கோர விபத்து; பலர் படுகாயம்

மன்னார், மே 05

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, கள்ளியடி பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கோர விபத்தில் பலர் படுகாயமடைந்தாக இலுப்பைக்கடவை பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து கள்ளியடி பகுதியில் பணியாளர்களை ஏற்றுவதற்காக வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

வேகக் கட்டுப்பாட்டை யிழந்து அதிவேகமாக சென்ற கனரக வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துடனும் மோட்டார் சைக்கிளிலுடனும் மோதி பெரும் விபத்தை ஏற்படுத்தியது.



மோட்டார் சைக்கிளில் நின்ற நபரும் காயமடைந்ததுடன், அவரது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

குறித்த விபத்தில் கன ரக வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும், ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் 09 பேரும் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பில் இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பல்கலை. மாணவனுக்கு நீதி கிடைக்கும்

## சட்டத்தரணிகள் நம்பிக்கை

கொழும்பு, மே 05

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவரின் மரணம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையில், எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக பாதிக்கப்பட்ட தரப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சட்டத்தரணிகள், உயிரிழந்த மாணவனுக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் நீதி கிடைக்கும் என்று நம்புவதாகக் கூறினர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவரான சரித் தில்ஷான், கடந்த 29 ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொள்வதாக அவர் கடிதம் எழுதியிருந்தாலும், பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதையை தாங்க முடியாமல் சரித் தற்கொலை செய்து கொண்டதாக அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இந்த விடயம் குறித்து முழுமையான விசாரணை நடத்த ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரித்துடன் பகிடிவதைக்கு உள்ளானதாக கூறப்படும், 16 மாணவர்களிடம் சமனலவெவ பொலிஸார் நேற்று முன்தினம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்.

அந்த மாணவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் சட்டத்தரணிகளான ரச்சிக பலிஹவடன மற்றும் கல்ஹார விஜேசிங்க ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர். (எ)

நாளை உள்ளூர் அதிகார சபை தேர்தல்

# தீவக கடல் போக்குவரத்து தொடர்பில் கடற்படையினருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 05

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பில் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்து தொடர்பில் கடற்படை அதிகாரிகளுடன் முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போது,

நாளை 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பில் கடற்படையின் ஒத்துழைப்பை குறிப்பாக தீவக போக்குவரத்துக்கு கடற்படையின் ஒத்துழைப்பை வழங்குமாறு பதில் அரச அதிபர் கேட்டுக் கொண்டார். அத்தோடு, கடல்வழி போக்குவரத்து தொடர்பாக ஆராய்ந்தார்.

அந்த வகையில் கடல்வழியாக தீவகப்பகுதிக்கு தேர்தல்



கடமைக்காக செல்லவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பயண ஒழுங்கு தொடர்பில் ஆராயப்பட்டு, குறிகட்டுவான் படகுத் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு வடதாரகை கப்பல் மூலமும், நயினாதீவுக்கு தனியார் படகுமூலம் இன்று 05 ஆம் திகதி காலை 09.00 மணிக்கும், ஊர்காவற்றுறை படகுத் துறையிலிருந்து எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு கடற்படை படகுகள் மூலம் காலை 09.00 மணிக்கும் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் சுதந்திரமாகவும் சுமூக மாகவும் நடைபெற்றன. இதன் போது, தீவக கடல் போக்குவரத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தமது நன்றியை கடற்படையினருக்கு தெரிவத் தாட்சி அலுவலர் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலன், வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் தொடர்பான விவரங்களை முன்வைத்தார். தேர்தல் கடமைக்காக இணைக்கப்பட்ட சுகாதார அமைச்சின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் பொ. தயானந்தன், முறைப்பாட்டுப் பிரிவின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ப. பிரபாகர் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதை ஒழிப்பு தொடர்பில் கல்வி அமைச்சில் இன்று கூட்டம்

கொழும்பு, மே 05

**பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை இல்லாமல் செய்வதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் தலைமையில் அவசர கூட்ட மொன்று இன்று திங்கட்கி ழமை பிற்பகல் 2:30 மணிக்கு நிகழ்நிலையில் நடைபெறவுள்ளது.**

நாட்டின் அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை இல்லாதொழிப்பது பற்றியும் பகிடிவதைக்கு எதிராக நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை மேலும் இறுக்கமாக நடைமுறைப்ப டுத்துவது பற்றியும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் கபில செனிவரத்ன தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களில் இருந்தும் பீடாதிபதிகள், வளாக முதல்வர்கள், சட்ட நிறைவேற்று அலுவலர்கள், மாணவ ஆலோசகர்கள் மற்றும் விடுதிக்காப்பாளர்களுடன் துணைவேந்தர்களை கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வி நிலையங்களில் இடம்பெறும் பகிடிவதை மற்றும் வன்முறைகளைத் தடைசெய்வதற்காக 1998ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க "பகிடிவதையையும், வேறுவகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டம்", 2015ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க "குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம்" மற்றும் 2017 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க "குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்த)ச் சட்டம்" ஆகிய சட்டங்கள் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்டு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு 24 மணிநேர அவசர முறைப்பாட்டுப் பொறிமுறையையும் செயற்படுத்தி வருவதோடு, கடுமையான தண்டனைகளும் வழங்கப்படுகின்றன.

எனினும், அண்மையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட இரண்டாம் வருட மாணவன் ஒருவர் பகிடிவதை காரணமாக ஏற்பட்ட மனழுத்தத்தால் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தையடுத்தே கல்வி அமைச்சின் செயலாளரால் இன்றைய கூட்டத்துக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவனின் மரணம் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணையை நடத்துவதற்காக விசாணைக் குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்முறை கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் பெண் வன்புணர்வு வேட்பாளர் ஒருவர் கைது!

கொழும்பு, மே 05

உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 19 வயது யுவதியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை லக்கலை பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் பிரச்சாரம் முடிவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 24 இந்திய மீனவர்கள்மீது இலங்கையர்கள் தாக்குதல்!

## இந்திய ஊடகங்கள் குற்றச்சாட்டு

சென்னை, மே 05


இந்தியாவின் கிழக்கு கடற்பகுதியில் வைத்து, 24 இந்திய மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில், குறித்த தாக்குதலை கண்டித்து நாகப்பட்டின மீனவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையை சேர்ந்த சிலரே இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 9 வளைவு பாலத்தில் நீர் கசிவு!



கொழும்பு, மே 05

பிரசித்தி பெற்ற பதுளை - எல்ல 9 வளைவு பாலத்தில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் கனமழை காரணமாக இந்த நீர் கசிவு ஏற்பட்டுள்ளதாக அந்தப் பாலத்துக்கு பொறுப்பான ரயில் போக்குவரத்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

எல்ல 9 வளைவு பாலம் அதிக சுற்றுலா பயணிகளின் கவனத்தை ஈர்க்கிறது.


எல்ல மற்றும் தெமோதர ரயில் நிலையங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம் 300 அடி நீளமும், 25 அடி அகலமும் மற்றும் 80 அடி உயரமும் கொண்டது.

1921ஆம் ஆண்டு இந்தப் பாலம் கட்டப்பட்டது. 100 வருடங்களுக்கு மேலான குறித்த பாலத்தின் அடிப்பகுதியில் சில சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

# ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் ஹரிணியை சந்தித்தார்!

கொழும்பு, மே 05

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நகாதானி, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்தார்.



இந்த சந்திப்பில், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டது. நீண்டகால இரு தரப்பு நட்புறவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தோ - பசுபிக் பிராந்தியம் முழுவதும் அமைதி மற்றும் ஸ்திரதன்மையை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஜப்பானின் ஆதரவை ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய உறவுகளில் இலங்கையின் மூலோபாய முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு ஜப்பானிய அரசாங்கம், குறிப்பாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

வெளிப்படைத்தன்மை, பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தேசிய மாற்றத்துக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றம், மனிதாபிமான உதவி மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற பொறுப்புகளை உள்ளடக்கியதாக இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் பங்கை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வை குறித்தும் பிரதமர் கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட ஐந்து முக்கிய துறைகளில் இராஜதந்திர உறவுகளை மேலும் விரிவுபடுத்தவும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர் என்று பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 6 முன்னாள் அமைச்சர்கள் விரைவில் கைதாவார்கள்?

கொழும்பு, மே 05

ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் 6 முன்னாள் அமைச்சர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் முடிவடைந்துள்ளன. இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவை இந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. இதன்படி, எதிர்வரும் நாட்களில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குருநாகல், கண்டி, பதுளை, மொனராகலை மாவட்டங்களை சேர்ந்த ஐந்து முன்னாள் அமைச்சர்கள் மற்றும் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருக்கும் எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதியின் அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமனம்!

கொழும்பு, மே 05

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வியட்நாம் சென்றுள்ளமையால் அவரின் அமைச்சு பொறுப்புகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிற்றல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்பு பதில் அமைச்சராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர். இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் அமைச்சுகளுக்கு பதில் அமைச்சராக அந்த அமைச்சின் பிரதி அமைச்சரான அருண் ஹேமசந்திர நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உரையாடல் நிறைவு!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, மே 05


பாகிஸ்தானுடனான ஐந்தாவது இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் கடந்த 28ஆம் திகதி இரு நாடுகளின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமானது.

இதில், இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் சம்பத் துய்யகொந்தா தலைமையிலான தூதுக்குழு கலந்து கொண்டிருந்தது.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள பாதுகாப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய புதிய வழிகளை ஆராய்வதற்கான வாய்ப்பு இந்தக் கலந்துரையாடல் ஊடாகக் கிடைக்கப் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# ஓட்டோவை மோதியது பேருந்து மூவர் சம்பவ இடத்திலேயே பலி!



கொழும்பு, மே 05

முச்சக்கர வண்டியை பேருந்து மோதியதில் அதில் பயணித்த மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கம்பஹா - வத்துராகம வீதியில் கினிகம பிரதேசத்தில் இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்த விபத்தில், முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்தையடுத்து, பேருந்தின் சாரதி கைது செய்யப் பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆஸ்துமா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, மே 05

நாட்டில் தற்போது ஆஸ்துமா (முட்டு) நோயாளர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உலகளவில் ஒரு இலட்சம் பேரில் 3 ஆயிரத்து 340 பேர் ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுவாச மருத்துவ ஆலோசகர் டொக்டர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளை உலக ஆஸ்துமா தினமாகும். இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில், கலந்து கொண்டபோதே டொக்டர் சமரநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்ஹேலர் அடிப்படையிலான சிகிச்சையானது பக்க விளைவுகளை ஏற்படுத்தாமல் ஆஸ்துமாவை குணப்படுத்த முடியும். இந்த விடயத்தில் மேலும் பேசிய சுவாச வைத்திய ஆலோசகர் மக்கள் தொகையில் ஆஸ்துமா பரவலாக இருந்தாலும், நாட்டில் பல நபர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மனைவி கொலை கணவன் கைது!

கொழும்பு, மே 05

மனைவியை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொன்ற நபரை பொலிஸார்கைது செய்துள்ளனர்.

பொலநறுவை வடக்கில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், 49 வயது பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் பொலநறுவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# இராணுவத்தினருக்கான விசேட பஸ் சேவையை நிறுத்த முடிவு!

கொழும்பு, மே 05

இராணுவ சிப்பாய்கள், அதிகாரிகளுக்காக இதுவரை வழங்கப்பட்ட விசேட போக்குவரத்து சேவையை இடைநிறுத்த இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து வார நாட்களில் அலவ்வை, மீரிகம, கணேமுல்லை, காலி, மாத்தறை, குருநாகல், தெல்தெனிய, கண்டி, சதுருவெல, மதவாச்சி மற்றும் நாத்தாண்டியா வரை இராணுவத்தினருக்காக விசேட பேருந்து சேவைகள் நடத்தப்பட்டன.

வார இறுதி நாட்களில் இந்த பேருந்து சேவைகள் பதுளை, மகியங்கனை, மொனராகலை சிலாபம் வரை நீடிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பயணம் செய்யும் சிப்பாய்கள், அதிகாரிகளிடம் சிறு தொகையே போக்குவரத்து கட்டணமாக அறவிடப்பட்டது.

இராணுவத்தின் எரிபொருள் பயன்பாட்டை மட்டுப்படுத்த இந்த பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக இராணுவத்தினர் செல்ல வேண்டிய இடங்களுக்கு அருகாமையில் உள்ள புகையிரத நிலையம் வரை அவர்கள் இலவசமாக பயணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி அநுர குமாரவுக்கு வியட்நாமில் பெரும் வரவேற்பு

கொழும்பு, மே 05

வியட்நாமை சென்றடைந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங்கின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுர குமார அங்கு சென்றுள்ளார். நேற்று முன்தினம் இரவு புறப்பட்ட அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நோய் பாய் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

ஜனாதிபதி அநுர தலைமையிலான குழுவினரை வியட்நாம் கம்யூனிஷ கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வெளிவிவகார பிரதி அமைச்சருமான நுயென் மான் குவோங் உள்ளிட்ட தரப்பினர் வரவேற்றனர்.

நாளைய தினம் ஜனாதிபதி அநுர ஹோ சி மின் நகரில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் வெசாக் தின கொண்டாட்டங்களில் பங்கேற்பதுடன் சிறப்பு உரையும் ஆற்றவுள்ளார்.

இந்தப் பயணத்தில் இரு தரப்பினருக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடவும் வர்த்தக சமூகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பகிடிவதையில் ஈடுபட்ட 6 மாணவருக்கு வகுப்பு தடை!

கொழும்பு, மே 05

பகிடி வதையை எதிர்த்தமைக்காக இரண்டாம் ஆண்டு மாணவனை தாக்கிய 6 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதித் துள்ளது சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.

வகுப்பு தடை விதிக்கப்பட்ட 6 மாணவர்களும் தொழில்நுட்ப பிரிவை சேர்ந்த 2ஆம் ஆண்டு மாணவனை பகிடி வதைக்கு உட்படுத்தியுள்ளனர். அவர் எதிர்த்ததையடுத்து அவரை கடுமையாக தாக்கினர். இதில், காயமடைந்த மாணவன் வெலிகம மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இதனிடையே, பாதிக்கப்பட்ட மாணவன் பொலிஸில் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்களான 6 மாணவர்களையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஐஸ் போதையுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 05

கிரிஸ்டல் மெத்தம்பெட்டமைன் எனப்படும் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை - அரநாயக்க பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படை யில் சந்தேகநபர்கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர். 40இற்கும் மேற்பட்ட வாகனங்களை திருடியமை உள்ளிட்டவற்றுக்காக தண்டனை பெற்றவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ரூ. 13,000 கோடி மதிப்புள்ள திறைசேரி உண்டியல் ஏலம்!

கொழும்பு, மே 05

ரூ13 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 6 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

# சிறையிலுள்ள சாமர எம். பியிடம் 4 மணிநேரம் வாக்குமூலம் பதிவு!

கொழும்பு, மே 05

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் 270 கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் ஒப்பந்தம் தொடர்பில் தற்போது, விளக்க மறியலிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்காவிடம் 4 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் இந்த வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

பாஸ்பேட் நிறுவனம் ஊடாக கடந்த காலத்தில் ஏற்றுமதிக்காக மூன்று நிறுவனங்களுக்கு 30 ஆயிரம் மெற் றிக் தொன் ரோக் பாஸ்பேட்டை (தாதுப் பொருள்) சட்டவிரோ தமாக விற்பனை செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 270 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகள் சட்ட விரோத சொத்துக்கள் விசாரணைப் பிரவின் பதில் பணிப் பாளர் சுஜீவ விஜயசேனவின் அறிவுறுத்தலின் பேரில் முன் னெடுக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச உடன்படிக்கைகளுடன் அரசாங்கம் விளையாடக்கூடாது!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை



கொழும்பு, மே 05

**சர்வதேச ஒப்பந்தங்களுடன் அரசாங்கம் அரசியல் விளையாட நினைத்தால் பாரதூரமான நிலைமையே ஏற்படும். மின்சார கட்டண அதிகரிப்பு நாணய நிதிய நிபந்தனைகளில் முக்கியமான ஒன்றாகும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

தனது தனிப்பட்ட அரசியல் பணிமனையில் நடத்திய சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நான்காவது தவணை கொடுப்பனவை விடுவிக்கப்போவதில்லை என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின்றது.

மின்சார கட்டணத்தை உடனடியாக அதிகரிக்குமாறு நாணய நிதியத்தின் அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஏற்கனவே, குறிப்பிட்ட கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், தனது அரசியல் போலித்தனத்தால் அரசாங்கம் சிக்கியுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கத்துக்கு இதுவொரு நெருக்கடியான நிலைமைதான். நடைமுறையில் உள்ள மின்சார கட்டணம் மின்சார உற்பத்தி செலவை ஈடு செய்யவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

ஆகவே, கட்டண அதிகரிப்பு நிச்சயம் இடம்பெற வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இவான் பாபஜோர்ஜியோ வலியுறுத்தியுள்ளார். எனவே சர்வதேச நாணய நிதியத்தின் பிரச்னையை எம்மீது சுமத்துவது முறையல்ல. மாறாக தீர்வுகளை காண முயற்சிக்க வேண்டும்.

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாடுகளுக்கு சென்று நாட்டுக்கு எதிராகப் பேசியதில்லை. இதனை அனைவரும் அறிவர். நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன வாஷிங்டனுக்கு சென்றிருந்தார். அங்குதான் மின்சார கட்டண விவகாரம் பேசப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச விடயங்களுடன் இவ்வாறு அரசாங்கம் விளையாட இயலாது. நாடு நெருக்கடிக்குள் செல்லுமாயின் தலையீடுகளை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ஐ)

# மதுபான சாலைகள் நாளை மூடப்படும்!

கொழும்பு, மே 05

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக நாளைய தினம் மதுபானசாலைகள் மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உரிமங்களை கொண்ட மதுபான விற்பனை நிலையங்களை தவிர, அனைத்து சில்லறை மதுபான சாலைகளும் நாளைய தினம் மூடப்படும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளம் பெண் கைதானார்!

கொழும்பு, மே 05

20 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சனிக்கிழமைஅநுராதபுரம் - மிஹிதுபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பிலேயே குறித்த யுவதி கைது செய்யப்பட்டார்.

கைதானவர் அதே இடத்தைச் சேர்ந்த 24 வயதுடைய வராவார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 05

காலியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

காலி - அம்பலாங்கொடை - மீட்டியாகொட, தம்பஹிட் டிய பகுதியில் உணவகம் ஒன்றின் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அங்கு நின்றிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்தினர். இதில், 46 வயது நபர் உயிரிழந்தார். 52 வயது நபர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் பலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் சம்பவம் தொடர் பில் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கிளப் வசந்த கொலை சந்தேகநபர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்!



கொழும்பு, மே 05

கிளப் வசந்த கொலை சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

"லொக்கு பெட்டி" என்று அழைக்கப்படும் சுஜீவ ருவான் குமார டி சில்வா பெலாரஸில் கைது செய்யப்பட்டார். நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.43 மணியளவில் டுபாயிலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்காவுக்கு அழைத்து வரப்பட்டார்.

2024ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதி அத்துருகிரிய பகுதியில் உள்ள பச்சை குத்தும் நிலையமொன்றின் திறப்பு விழாவுக்கு சென்ற சுரேந்திர வசந்த பெரேரா என்ற கிளப் வசந்த சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட லொக்கு பெட்டி என்ப வர், கிளப் வசந்த கொலையை திட்டம் தீட்டியதுடன், அதற் காக பணமும் வழங்கியிருந்தார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# நியூசிலாந்து, போலந்து வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கை வருகின்றனர்

கொழும்பு, மே 05

நியூசிலாந்து, போலந்து நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீற்றர்ஸ் எதிர்வரும் 25ஆம் திகதியும் போலந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி எதிர்வரும் 28ஆம் திகதியும் நாட்டுக்கு வருகை தருவார்கள்.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை சந்தித்துக் கலந்துரையாடுவர்.

இதன்போது, பொருளாதார ரீதியில் நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையில் புதிய முதலீட்டு திட்டங்கள் குறித்து அரசாங்கம் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுடனான உறவை வளர்ப்பதில் அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது.

இந்நிலையில், ஐரோப் பிய ஒன்றியத்தில் செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றான போலாந்து வெளிவிவகார அமைச்சரின் வருகை முக்கியத் துவம் பெற்றுள்ளது. (ஐ)

# ஆறு பெருக்கெடுத்ததில் நீராடிய ஒருவர் மரணம்!

சிலாபம், மே 05

புத்தளத்தில் ஆற்றில் நீராடியவர்களை நீரோட்டம் இழுத்துச் சென்றதில் ஒருவர் உயிரிழந்தார். இளம் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

வனாத்தவில்லு பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கலா ஓயாவில் சிலர் நீராடச் சென்றுள்ளனர். ஆற்றின் நீரோட்டத்தில் இருவர் அடித்துச் செல்லப்பட்டனர். இதில், 42 வயதான நபர் உயிரிழந்தார். 22 வயதான பெண் காணாமல் போயுள்ளனார் என்று தெரிய வருகிறது.

மேலும், காணாமல் போன பெண்ணை கடற்படையினரும் பிரதேச வாசிகளும் தேடி வருகின்றனர்.

காணாமல் போன இருவரும் கற்பிட்டி - வன்னிமுந்தலம் பகுதியை சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மருந்துகள் விலை குறைப்பு; உரிய தரப்புகளுடன் பேச்சு!

கொழும்பு, மே 05

மருந்து விலைகளைக் குறைக்க வேண்டியதன் அவசியம், அதற்கான அரசாங்கத்தின் ஆயத்தம் குறித்து சுகாதார அமைச்சில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கம், மருந்து முதலீட்டு சபை, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழு உள்ளிட்ட மருந்தக இறக்குமதி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரதிநிதிகளும் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மருந்துகளின் விலைகளைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் பற்றாக்குறை இல்லாமல் மருந்துகள் விநியோகத்தை உறுதி செய்வதன் அவசியத்தையும் சுகாதார அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

செலவு, காப்பீடு மற்றும் விநியோக மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அதிகபட்ச சில்லறை விலையை 80 சதவீதமாக வழங்கினால் மட்டுமே மொத்த விற்பனையாளர்களுக்கு 18 சதவீத இலாபம் ஈட்ட முடியும் என்று தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் விலைக் குழு வலியுறுத்தியுள்ளது.

விலை நிர்ணய சூத்திரத்தை பயன்படுத்துவதன் மூலம், பொதுவாகப் பயன்படுத்தப்படும் பல மருந்துகளின் தற்போதைய விலைகள் மற்றும் விலை குறைப்புகள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மருந்து முதலீட்டு சபைக்கு அமைச்சர் அறிவுறுத்தினார் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# பெருந்தொகை கசிப்புடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, மே 05

பெருந்தொகை கசிப்பு மற்றும் கோடாவுடன் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


நேற்று முன்தினம் இவர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு - வெலிஹேனவத்தையில் நடத்தப்பட்ட சோதனயில் 101 லீற்றர் 250 மில்லி லீற்றர் (135 போத்தல்கள் ) கசிப்புடன் ஒருவர் கைதானார். கைதானவர் 43 வயது நபராவார்.

இதேபோன்று, இராஜாங்கனை பொலிஸ் பிரிவில் 225 லீற்றர் கசிப்பு மற்றும் 2 ஆயிரத்து 345 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 41 வயது நபராவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான தேர்தலுக்காக கிண்ணியாவில் விழிப்புணர்வு




திருகோணமலை, மே 05

அமைதியான தேர்தலுக்காக என்கிற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வொன்று திருகோணமலை மாவட்டம் கிண்ணியா விஷன் மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வை நீதியானதும் சுதந்திரமானதுமான மக்களுக்கான தேர்தலுக்கான இயக்கம் - கபே ஏற்பாடு செய்திருந்தது.

தேர்தல் காலங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டிய முறை தொடர்பிலும் இதன் போது தெளிவூட்டப்பட்டன.

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி பங்கேற்றார்.

இதில் மாவட்ட இணைப்பாளர் ராபில், சமூக பெண் சிவில் செயல்பாட்டாளர்கள், பெண் வேட்பாளர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுக்கு வருகைதந்தவர்கள் "அமைதியான தேர்தலுக்காக" எனும் பதாகையில் கையொப்பமிட்டனர்.

இதன் பின்னர், கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்ததில் இருந்து கபே அமைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அந்த அடிப்படையில், தேர்தலுக்கு முன்னர், பின்னர், தேர்தல் அன்று என மூன்று தினங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாவட்ட மட்டத்தில் 26 இணைப்பாளர்களும் தேசிய மட்டத்தில் 105 கண்காணிப்பாளர்களும் தேர்தலுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலுக்கு முன் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகின்ற போது, இம்முறை அதிகளவு முன்னேற்றம் காணப்படுகிறது.

2011, 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விடவும் வன்முறைச் சம்பவங்கள் குறைந்தளவில் பதிவாகியுள்ளன. எனவேதான், சமாதானமான, சுமுகமான, வன்முறையற்ற தேர்தலை நடத்த இந்த காலப்பகுதியில் அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (எ)

# உள்ளூராட்சி தேர்தலின்போது அடிப்படை உரிமைகள் மீறலா?

## ஆணைக்குழுவை உடன் நாடுங்கள்



கல்முனை, மே 05

**உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமைகளை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்ய முடியுமென பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான உரிமைகளுடன் சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த வகையில் நாட்டின் பிரஜை ஒருவர் அரசியல் விடயங்களில் ஈடுபடவும், தேர்தலில் போட்டியிடவும், வாக்களிக்கவும் உரிமையைக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் என்பது ஒரு நாட்டின் மக்கள் பொது வாழ்வில் பதவிகளை நிர்வகிப்பதற்காக ஒரு தனி நபரை தேர்ந்தெடுக்க அல்லது முடிவெடுக்க ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு செயன்முறையாகும். தேர்தல் திகதி அறிவித்த பின்னர் அரசியல்வாதிகளும் அவர்களது ஆதரவாளர்களும் ஒருவருக்கொருவரான போட்டியில் வாக்காளர்களிடம் நேரடியாகச் சென்று அவர்களை அறிமுகம் செய்து வாக்குகளைக் கேட்கும் முறைமையை காலம் காலமாக செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் மக்களுக்கு இலஞ்சம் கொடுத்து அல்லது அச்சுறுத்தல் விடுத்து வாக்குகளை கேட்பது தேர்தல் ஜனநாயக முறைமைக்கு முரணாகும்.

எப்படி வாக்குப் பதிவு செய்வது என்பதைப் பற்றி தவறான தகவல்களையும், எப்படி வாக்காளர்களைக் குழப்புவது அல்லது தவறான தகவல்களை அளிப்பது இரகசிய வாக்குப் பதிவு முறைமையை மீறுவது, வாக்குப் பெட்டியில் வாக்குச் சீட்டுக்களை முன்கூட்டியே நிரப்புவது, வாக்காளர்களை அச்சுறுத்துவது போன்றவைகள் தேர்தல் மீறல்களாகவே கருதப்படும்.

ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் அரசமைப்புக்கு அமைவாக செயல்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல், பக்கச்சார்பாக செயல்படல் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கு மற்றும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

இந்த அடிப்படையில் கல்முனை பிராந்தியத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான ஏதுக்கள் இருக்குமாக இருந்தால் முறைப்பாடு செய்ய முடியும்"- என்றார். (எ)

# ஆசிரியர்களுக்கு செயலமர்வு




கல்முனை, மே 05

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்குட்ட இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கான நினைவாற்றல் வாண்மை விருத்திச் செயலமர்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.


பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.ரிஷாத் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பாடசாலை ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்தக் கருத்தரங்கிற்கு வளவாளராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் யூ. எஸ். சபீல் கலந்து கொண்டார். (எ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா!







ஒலுவில், மே 05

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, நேற்று முன்தினம் சனிக்கிழமை பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் ஆரம்பமானது.

வேந்தர் பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் துணைவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி, மற்றும் ஞாயிறு இரு தினங்களாக நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்.

சனிக்கிழமை முதலாம் நாள் முதல் அமர்வில் உயர் நீதிமன்ற நீதிபதி யசந்த கொடகொட பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதார துறை பேராசிரியர் கலாநிதி சீதா.வி. பண்டாரவும், மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

முதல் நாளில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும், பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும், தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும், கலை கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் நாள் முதல் அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல்.வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பியும் கலந்துகொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போப் தோற்றத்தில் டொனால்ட் ட்ரம்ப்!

## இணையத்தில் வைரலாகும் படம்

வாஷிங்டன், மே 05

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பாப்பரசர் போன்று தோற்றமளிக்கும் ஒரு படத்தை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.



கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21ஆம் திகதி காலமானார்.

இந்த நிலையில், ட்ரம்ப் போப் உடையில் இருப்பது போன்ற ஒரு படத்தை பகிர்ந்துள்ளார். ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. இப்படத்தை "எக்ஸ்" தளத்தில் வெள்ளை மாளிகையும் பகிர்ந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு வெள்ளைமாளிகையில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் செய்தியாளர்களிடம் ட்ரம்ப் பேசுகையில், "நான் பாப்பரசராக விரும்புகிறேன். அதுவே எனது முதல் தெரிவாக இருக்கும்"- என்று குறிப்பிட்டார். இதன் தொடர்ச்சியாகவே போப் தோற்றத்தில் இருக்கும் படத்தை ட்ரம்ப் பகிர்ந்துள்ளார். (எ)

# இலக்கை துல்லியமாக தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றி!

## பாகிஸ்தான் இராணுவம் அறிவிப்பு

இஸ்லாமாபாத், மே 05

450 கிலோ மீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்கவல்ல ஏவுகணை சோதனையை வெற்றிகரமாகச் செய்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. இந்த ஏவுகணை அப்தலி வெப்பன் சிஷ்ரம் என்று அந்த நாட்டு இராணுவத்தால் அழைக்கப்படுகிறது.

கடந்த மாதம் 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காமில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உத்தரவின் பேரில், லஷ்கர் -இ-தொய்பா திட்டமிட்டுள்ளது என இந்தியாவின் தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) தனது முதல் கட்ட விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத பதிலடி கொடுக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எச்சரித்திருந்த நிலை யில், பாதுகாப்பு ஆலோசனைக் குழுக் கூட்டம், பாதுகாப்பு அமைச்சரவை கூட்டம், மத்திய அமைச்சரவைக் கூட்டம் எனப் பல கட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டன. பாகிஸ்தானும் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியது. இதனால் இந்தியா - பாகிஸ் தான் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் தான் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாகச் செய்துள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.(எ)

# துனிசியா முன்னாள் பிரதமருக்கு 34 ஆண்டுகள் சிறைத்தண்டனை

துனிஸ், மே 05

துனிசியாவின் முன்னாள் பிரதமருக்கு 34 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



வடக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு துனிசியா. அந்த நாட்டின் பிரதமராக 2013 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் அலி லராயோத். இவர் பயங்கரவாதத்துக்கு ஆதரவாக செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் 2022ஆம் ஆண்டு அலி லராயோத் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிரியாவில் போரிட துனிசியாவிலிருந்து ஆயுதக்குழுவினரை அனுப்பி வைத்ததாக அலி லராயோத் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் அலி லராயோத் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதேவேளை, எதிர்க்கட்சியை அடக்கவே அலி லராயோத் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதி கயிஸ் சையது எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (எ)

# சிந்து நதி நீரைத் தடுக்கும் கட்டமைப்பை தகர்ப்போம்

## இந்தியாவுக்கு பாகிஸ்தான் பகிரங்க எச்சரிக்கை

இஸ்லாமாபாத், மே 05



**"சிந்து நதி நீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை மீறி, நதி நீரைத் தடுத்து இந்தியா ஏதாவது புதிய கட்டமைப்பை உருவாக்கினால், அதனைத் தாக்குவோம்"- இவ்வாறு எச்சரித்துள்ளார் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப்.**

தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் அமைச்சர் கவாஜா ஆசிப் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில், "சிந்து நதியில் புதிதாக எந்தவொரு கட்டமைப்பையும் கட்டுவது, இந்தியாவின் ஆக்கிரமிப்பாக பார்க்கப்படும். அவர்கள் சிந்து நதியில் ஏதாவது கட்டமைப்பைக் கட்ட முயன்றால், அதன்மீது நாங்கள் கட்டாயம் தாக்குவோம். ஆக்கிரமிப்பு என்பது பீரங்கியாலோ துப்பாக்கியாலோ சுடுவது மட்டுமில்லை அதற்கு பல முகங்கள் உள்ளன. தண்ணீரைத் தடுத்து நிறுத்துவதோ, திசை திருப்பி விடுவதோ அதில் ஒன்று. இது தாகம், பட்டினி மரணங்களுக்கு வழிவகுக்கும்.

நாங்கள் இந்த விவகாரத்தைத் தொடர்ந்து எடுத்துச் சொல்வோம். சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை மீறுவது இந்தியாவுக்கு எளிதல்ல. சம்பந்தப்பட்டவர்களை பாகிஸ்தான் அணுகும். இந்தியா தொடர்ந்து தூண்டிவிடும் வேலையைச் செய்கிறது. பாகிஸ்தான் பழி வாங்கும் நடவடிக்கையை மட்டுமே எடுக்கும்.

இந்தியாவின் நடவடிக்கைகள், இரண்டு அணு ஆயுத அண்டை நாடுகளுக்கு இடையே முழு போருக்கு வழிவகுக்கும். இராணுவ ஊடுருவல் நிகழும். தற்போது அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதால் நாங்கள் எங்கள் படைகளை பலப்படுத்தியுள்ளோம். தற்போதைய சூழலில் எத்தகைய யுக்திகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அணு ஆயுத விடயத்தில் பாகிஸ்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும். அதேநேரத்தில், எங்கள் இருப்புக்கு நேரடி அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்"- என்றார்.

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில், கடந்த வாரத்தின் தொடக்கத்தில் கவாஜா ஆசிப்பின் எக்ஸ் கணக்கை இந்திய அரசு தடை செய்திருந்தது.

இதனிடையே, காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முதலில் சிந்து நதி நீர் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்தியது. பின்னர் வாகா எல்லையை மூடியது, பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதேபோன்று பாகிஸ்தானும் பல அறிவிப்புகளை விடுத்துள்ளது.இதனால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.(எ)

# மருத்துவமனையில் குண்டு வெடிப்பு! 7 பேர் உயிரிழப்பு

ஜூபா, மே 05

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு தெற்கு சூடான்.

இந்த நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில், பேன்ஹக் நகரில் உள்ள மருத்துவமனையில் நேற்றுக்காலை பயங்கர குண்டு வெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 20 பேர் படுகாயமடைந்தனர்.

தெற்கு சூடான் மக்கள் பாதுகாப்புப்படை என்ற கிளர்ச்சி அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியதாக தகவல் வெளியா கியுள்ளது. இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# ஆஸி. பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கட்சி மீண்டும் வெற்றி

## பிரதமராகிறார் அல்பனீஸ்



கன்பெரா, மே 05

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற்றது. இதனையடுத்து, அந்தோணி அல்பனீஸ் மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் மொத்தம் 150 பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில், 76 தொகுதிகளை கைப்பற்றும் கட்சி ஆட்சியமைக்கும். இந்த நிலையில், அங்கு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

இதில், அவுஸ்திரேலியாவின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சியும், கன்சர்வேடிவ் கட்சியும் நேரடியாக போட்டியிட்டன. பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தலைமையில் தொழிலாளர் கட்சி களமிறங்கியது. எதிர்க்கட்சித் தலைவர் பீற்றர் டட்டன் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சி களமிறங்கியது. தேர்தலில் பரபரப்பாக வாக்குப் பதிவு நடைபெற்ற நிலையில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தொழிலாளர் கட்சி அதிக இடங்களை கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் அந்தோணி அல்பனீஸ் மீண்டும் அவுஸ்திரேலிய பிரதமர் ஆகிறார். அவர் பிரதமராக பதவியேற்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கார் மீது சுற்றுலா வான் மோதி விபத்து; 7 பேர் பலி!

வாஷிங்டன், மே 05

கார் மீது சுற்றுலா வான் மோதிய விபத்தில் 7 பேர் பலியாகினர்.




அமெரிக்காவின் ஐடாஹோ மாகாணம் யல்லோஸ்டோன் தேசிய பூங்கா அருகே நேற்று முன்தினம் மாலை சுற்றுலா வான் சென்றுகொண்டிருந்தது.

அந்த வானில் 14 சுற்றுலாப் பயணிகள் பயணித்தனர். நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தபோது திடீரென எதிரே வந்த கார் மீது வான் மோதியது. இந்தக் கோர விபத்தில் வான் தீப்பற்றி எரிந்தது.

சாரதி உட்பட 7 பேர் உயிரிழந்தனர். மேலும், 8 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.எஸ்.கேவுக்கு எதிராக

## 10 அரைச்சதங்கள் அடித்து விராட் கோலி சாதனை!

பெங்களூரு, மே 05

சி.எஸ்.கேவுக்கு எதிராக அதிக அரைச் சதங்கள் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார் விராட் கோலி.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் பெங்களூருவில் உள்ள சின்னச்சாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - சி.எஸ்.கே. அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணிக்கு ஜேக்கப் பெத்தேல், விராட் கோலி ஜோடி அதிரடி தொடக்கம் கொடுத்தது. ஜேக்கப் பெத்தேல் 33 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்கள் விளாசிய நிலையில் ஆட்டமிழந்தார்.

விராட் கோலி 33 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். நடப்பு ஐ.பி.எல். தொடரில் விராட் கோலி 11 இன்னிங்ஸ்களில் அடித்துள்ள 7ஆவது அரைச் சதம் இதுவாகும். அதேவேளையில் சி.எஸ்.கேவுக்கு எதிராக இது 10ஆவது அரைச் சதமாக அமைந்தது. இதன் மூலம், சி.எஸ்.கேவுக்கு எதிராக அதிக அரைச் சதங்கள் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார் விராட் கோலி. இதற்கு முன்னர் ஷிகர் தவன, டேவிட் வோர்னர், ரோஹித் சர்மா ஆகியோர் தலா 9 அரைச் சதங்கள் அடித்திருந்தனர்.

சி.எஸ்.கேவுக்கு எதிரான ஆட்டத்தில் விராட் கோலி 5 சிக்ஸர்கள் பறக்கவிட்டார். பெங்களூரு அணிக்காக அவர், இதுவரை ஒட்டுமொத்தமாக 304 சிக்ஸர்களை விளாசியுள்ளார். இந்த வகையில் ரி- 20 போட்டியில் ஓர் அணிக்காக அதிக சிக்ஸர்கள் விளாசிய சாதனையும் விராட் கோலி வசமே உள்ளது. கிறிஸ் கெயில் 263 ரோஹித் சர்மா 262 சிக்ஸர்களையும், கெய்ரன் பொலார்ட் 258 சிக்ஸர்களையும், எம்.எஸ்.டோனி 257 சிக்ஸர்களையும் பறக்கவிட்டுள்ளனர். (எ)

## இளம் வயதில் அரைச்சதம் ஆயுஷ் மாத்ரே சாதனை



பெங்களூரு, மே 05

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் இளம் வயதில் அரைச் சதம் அடித்த வீரர்களின் வரிசையில் ஆயுஷ் மாத்ரே இணைந்துள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத் தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் 17 வயதேயான ஆயுஷ் மாத்ரே குறைந்த பந்துகளில் அரைச் சதம் அடித்து அசத்தினார்.

இதன்படி, அவர் 8. 5ஆவது ஓவரில் விளையாடியபோது, அரைச் சதம் (25 பந்துகளில்) எடுத்துள்ளார். ஐ.பி.எல். போட்டியில் அவருடைய முதல் அரைச் சதம் இதுவாகும். இதனால், இளம் வயதில் குறைந்த பந்துகளில் அரைச் சதம் எடுத்தவர்களின் பட்டியலில் அவர் இடம் பெற்றுள்ளார்.

இளம் வயதில் அரைச்சதம் அடித்த வீரர்களின் பட்டியலில், ராஜஸ்தான் அணியை சேர்ந்த வைபவ் சூரியவன்ஷி (14 வயது) குஜராத் அணிக்கு எதிராகவும், ராஜஸ்தான் அணியை சேர்ந்த ரியான் பராக் (17 வயது) டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிராகவும், சென்னை அணியை சேர்ந்த ஆயுஷ் மாத்ரே (17 வயது) பெங்களூரு அணிக்கு எதிராகவும் அரைச் சதம் அடித்து அசத்தியுள்ளனர். இவர்கள் 18 வயதுக்குள் இந்தச் சாதனையை படைத்துள்ளனர்.

இதேபோன்று, ராஜஸ்தான் அணியை சேர்ந்த சஞ்சு சாம்சன் (18 -வயது) பெங்களூரு அணிக்கு எதிராகவும், டெக்கான் சார்ஜர்ஸ் அணியை சேர்ந்த பிருத்வி ஷா (18 வயது) கொல்கத்தா அணிக்கு எதிராகவும் அரைச் சதம் எடுத்துள்ளனர். (எ)


## சென்னை அணியை வீழ்த்தி ஆர். சி. பி. அசத்தல் வெற்றி

பெங்களூரு, மே 05

நடப்பு ஐ.பி.எல். சீசனின் 52ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி அசத்தல் வெற்றி பெற்றது.

பெங்களூருவில் உள்ள எம். சின்னச்சாமி கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆர்.சி.பி. அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணிக்காக ஜேக்கப் பெத்தல் மற்றும் விராட் கோலி இணைந்து முதல் விக்கெட்டுக்கு 97 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். இருவரும் அரைச் சதம் கடந்து ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த தேவ்தத் படிக்கல், ஜிதேஷ் சர்மா மற்றும் ரஜத் பட்டிதார் ஓட்டங்கள் சேர்க்க தடுமாறினர். இருப்பினும் கடைசி இரண்டு ஓவர்களில் 54 ஓட்டங்கள் எடுத்தது ஆர்.சி.பி. அணியின் ரொமாரியோ ஷெப்பர்ட் அதிரடி காட்டினார். அவர் வெறும் 14 பந்துகளில் 53 ஓட்டங்களை விளாசினார். அதில், நான்கு 4 மற்றும் 6 சிக்ஸர்களை அவர் பறக்கவிட்டார்.

வெற்றி பெற 214 ஓட்டங்கள் என்ற இலக்குடன் சி.எஸ். கே. களமிறங்கியது. ஆயுஷ் மாத்ரே 9 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்கள் என 94 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். ஷேக் ரஷீத் 14 ஓட்டங்களுடன் வெளியேறினார். சாம் கரன் 5 ஓட்டங்களுடன் ஏமாற்றவே, இன்னொரு புறம் ரவீந்திர ஜடேஜா 77 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை களத்தில் இருந்தார். எம். எஸ். டோனி 12 ஓட்டங்கள், ஷிவம் துபே 8 ஓட்டங்கள் என 20 ஓவர்கள் முடிவில் இலக்கை எட்ட முடியாமல் 211 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. இதனால், 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி வெற்றி பெற்றது. (எ)



## ரபாடாவுக்கு தடை!



கேப்டவுன், மே 05

போதைப் பொருள் பயன்படுத்தியதால் தனக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது என ரபாடா தெரிவித்தார்.


தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ரபாடா. இவர் நடப்பு ஐ.பி.எல். தொடரில் குஜராத் அணியில் இடம் பிடித்திருந்தார். முதல் இரண்டு போட்டிகளில் விளையாடிய நிலையில், சொந்த காரணத்துக்காக உடனடியாக தென்னாபிரிக்கா புறப்பட்டுச் சென்றார். இவர் மீண்டும் எப்போது அணியில் இணைவார் என எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், போதைப்பொருள் சோதனையில் மகிழ்ச்சி அல்லது உடல் சோர்வை போக்குவதற்கான போதைப்பொருள் பயன்படுத்தியதாக தெரியவந்துள்ளதாகவும், இதனால் தடை பெற்றுள்ளேன் எனவும் ரபாடா கூறியுள்ளார். இது தொடர்பில் ரபாடா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நான் ஏமாற்றிய அனைவருக்காகவும் மிகவும் வருந்துகிறேன். கிரிக்கெட் விளையாடும் பாக்கியத்தை நான் ஒருபோதும் அற்பமாக எடுத்துக்கொள்ள மாட்டேன். இந்த பாக்கியம் என்னை விட மிகப் பெரியது. இது எனது தனிப்பட்ட விருப்பங்களை விட அதிகம். நான் தற்காலிக இடைநீக்கத்தை அனுபவித்து வருகிறேன், நான் விளையாட விரும்பும் விளையாட்டுக்குத் திரும்புவதை எதிர்நோக்குகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

## தோல்விக்கான பழியை நான் ஏற்றுக்கொள்கிறேன்

### எம். எஸ். டோனி தெரிவிப்பு



பெங்களூரு, மே 05

தோல்விக்கான பழியை நானே ஏற்றுக்கொள்கிறேன் என்று எம். எஸ். டோனி தெரிவித்தார்.

பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு அரங்கேறிய 52ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.

இதில், ஆர். சி. பி. அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தோல்வி குறித்து கருத்து தெரிவித்த சென்னை அணியின் தலைவர் டோனி, “நான் இறுதிக் கட்டத்தில் இரண்டு சிக்ஸர்களை விளாசி மற்ற வீரர்கள் மீது இருந்த நெருக்கடியை குறைத்திருக்க வேண்டும். நான் செய்ததுதான் தவறு. எனவே, அதற்கான பழியை நானே ஏற்றுக் கொள்கின்றேன். பெங்களூரு அணியில் ஷெப்பர்ட் கடைசி கட்டத்தில் அபாரமாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தார்.

நாங்கள் எந்த மாதிரி பந்து வீசினாலும் ஷெப்பர்ட், அதை சிக்ஸருக்கு அடித்து அபாரமாக செயல்பட்டார்”- என்றார். (எ)

## 14 பந்தில் அரைச்சதம் ஷெப்பர்ட் சாதனை

பெங்களூரு, மே 05

ஐ.பி.எல். தொடரில் 2ஆவது அதிவேக அரைச்சதம் அடித்து சாதனை பட்டியலில் இணைந்துள்ளார் ஷெப்பர்ட். அவர் வெறும் 14 பந்தில் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

10 அணிகள் பங்கேற்றுள்ள 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் அதிரடியாக ஆடிய ரொமாரியோ ஷெப்பர்ட் 14 பந்தில் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

இது ஐ.பி.எல். தொடரில் 2ஆவது அதிவேக அரைச் சதம் ஆகும்.

இந்த பட்டியலில் ஜெய்ஸ்வால் (13 பந்து) முதல் இடத்தில் உள்ளார். கே.எல்.ராகுல், பட் கம்மின்ஸ், ஷெப்பர்ட் (தலா 14 பந்துகள்) 2ஆவது இடத்தில் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டங்களால்...

வேலைநிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## வாக்களிக்க...

தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றை அவர் தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான நியமனப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் கடமை அத்தியாவசியமானது. ஆகவே, பொறுப்பளிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் தமக்கான தேர்தல் பணிகளில் ஈடுபடுவது அத்தியாவசியமானது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் இன்று திங்கட்கிழமையும் தமது தபால்நிலையத்துக்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்காளர் அட்டையை பெறமுடியும். அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தி யோகபூர்வ இணையத்தளத்தில் தமக்கான வாக்காளர் அட்டையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வாக்காளர் அட்டையின்றியும் வாக்களிக்க முடியும். வாக்களிப்பு நிலையத்தில் ஏற்படும் சிரமங்களை தவிர்ப்பதற்காகவே வாக்காளர் அட்டை வழங்கப்படுகிறது. ஆகவே, இயலுமான வரை வாக்காளர் அட்டையுடன் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்லுங்கள்.

தேர்தல் பிரசாரங்கள் அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, நேரடியாகவோ அல்லது மறைமுகமா கவோ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடு வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள் ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பா ளர்கள் பொதுமக்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக செயல்பட வேண்டும். தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்கு போதுமான காலவகாசம் வழங்கப்பட்டது. ஆகவே, வாக்காளர்கள் சுயமாக சிந்தித்து தீர்மானம் எடுப்பதற்கு இடமளியுங்கள்.

அரச மற்றும் தனியார் துறையினர் வாக்களிக்க செல்வதற்கு போதுமான விடுமுறை வழங்குவது அத்தியாவசியம். அரச சேவையாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு குறைந்தபட்சம் 2 மணித்தியாலம் விடுமுறை வழங்கப்பட வேண்டும். வாக்களிப்பு மத்திய நிலையத்தின் தூரத்தை அடிப்படையாகக் கொண்டு குறித்த அரச சேவையாளருக்கு வாக்களிக்க செல்வதற்கு விடுமுறை வழங்குவது அரச நிறுவன பிரதானியின் பொறுப்பாகும். தனியார் துறையின் சேவையாளர்கள் வாக்களிக்க செல்வ தற்கு குறித்த சேவை வழங்குநர்கள் விடுமுறை வழங்க வேண்டும்.

தனியார் துறைகளில் விசேட விடுமுறை வழங்கும் விதிமுறையை பெரும்பாலான தொழில் தருநர்கள் பின்பற்றுவதில்லை என்று கடந்த காலங்களில் பல தேர்தல்களில் முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தனியார் துறைகளின் ஊழியர்களுக்கு தேர்தலில் வாக்களிக்க செல்வதற்கும், திரும்பி வருவதற்கும் தூரத்துக்கேற்ப விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இதன்படி, 40 கி.மீ. அல்லது அதற்கு குறைவாயின் அரை நாள் விடுமுறை, 40 - 100 கி.மீற்றர் எனின் ஒருநாள் 100 - 150 கி.மீ. இடைப்பட்டதாயின் ஒன்றரை நாள், 150 கி. மீற்றரருக்கும் அதிகமாயின் 2 நாட்கள் விடுமுறைகள் வழங்கப்பட வேண்டும் என்பது விதிமுறை. இதனை மீறுகின்ற அல்லது அதன்படி நடக்காதவர்கள் சிறைத் தண்டனைக்கு அல்லது தண்டப்பணம் கட்டவும் நேரிடும் - என்றார். (ஐ)

## புலிகளிடம்...

அந்த மக்களின் அனைத்து சொத்துகளையும் ஆயுத முனையில் பறிமுதல் செய்து வெளியேற்றியது யாவரும் அறிந்ததே.

இதன்போது, வட மாகாண முஸ்லிம்களின் ஒட்டுமொத்த உடைமைகளையும் பறித்து எடுத்து விட்டு உடுத்திய உடுப்புடன் வெளியேற்றப்பட்டனர். பெண்கள், சிறுமிகளின் காதுகளிலும் கழுத்துகளில் இருந்த நகைகளைக்கூட கழற்றி எடுத்து விட்டே புலிகள் துரத்தினர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் புலிகள் பதுக்கி வைத்திருந்த பெருந்தொகையான நகைகளை படையினர் கைப்பற்றி அதனை தாம் கொள்ளையடிக்காது அரசாங்கத்திடம் ஒப்படைத்தது பாராட்டத்தக்கது. அந்த நகைகள் நீதிமன்ற உத்தரவில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. தற்போதைய அரசாங்கம் பொலிஸாரின் பாதுகாப்பில் அவற்றை பரிசீலனைக்காக கொடுத்துள்ளது. நீதிமன்ற உத்தரவுடன் அவற்றை இழந்த மக்கள் உரிய ஆதாரங்களை காட்டினால் வழங்கப்படலாம் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

அதிகமான முஸ்லிம்களிடம் எந்தவித ஆதாரமும் இல்லை என்பதுடன் நகைகளைப் பறிகொடுத்த பலர் மரணமடைந்து விட்டனர். இவ்வாறான நிலையில் பெருமளவில் இழந்த முஸ்லிம்களின் நகைகளை அரசாங்கம் நியாயமான முறையில் ஆய்வு செய்து அவற்றை முஸ்லிம்களிடம் வழங்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மின்சார...

பாதுகாப்பு பலவீனமடையும். இதனால்தான் மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதற்காக கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்.

நடைமுறையில் தனியார் தரப்பினருக்கு மின்சாரத்தை விற்பனை செய்ய முடியும். இருப்பினும், மின் விநியோகக் கட்டமைப்பின் தனியுரிமை இலங்கை மின்சார சபைக்கே உண்டு. யார் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும் அதனை மின்சார சபைக்கு விற்பனை செய்ய வேண்டும். ஆகவே, மின் கட்டமைப்பின் தனியுரிமை அரசிடமே இருக்க வேண்டும்.

இலங்கை மின்சார சபையை பராமரிப்பதற்கு தொடர்ந்து மக்களின் வரிப் பணத்தை வழங்க முடியாது. மின்னுற்பத்திக்கான செலவுக்கு அமைய மின்சார சபை மின் பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்பது எமது கொள்கை.

மின்னுற்பத்தி செலவுக்கு அமைய மின்சார கட்டணத்தை தீர்மானிக்க வேண்டும் என்றே சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. மின்சார சபைக்கு திறைசேரியால் தொடர்ந்து நிதி விடுவிக்க முடியாது. ஏப்ரல் மாதம் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளுக்கான செலவு மற்றும் வரி உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மே மாதத்துக்கான எரிபொருள் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலக்கிடப்பட்ட எதிர்பார்ப்புக்கு அமைவாகவே மின்சாரக் கட்டணம் தீர்மானிக்கப்படுகிறது. வருடத்தில் இரண்டு முறை மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்படுகிறது. கடந்த ஜனவரி மாதம் மின்சார கட்டணம் குறைக்கப்பட்டது. ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களை வரையறுத்து இலங்கை மின்சார சபை நிறுவன ரீதியில் நட்டமடைவதாக மின்சார சபை குறிப்பிட்டது. மின்சார சபை நட்டமடையாது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டது. சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை மாதம் மின்சார கட்டணம் திருத்தம் செய்யப்படும். குறைந்தபட்ச அளவில் மின் கட்டணம் அதிகரிக்கப்படலாம் - என்றார். (ஐ)

# களுத்துறையில் துப்பாக்கிச்சூடு உள்ளூராட்சி வேட்பாளர் காயம்!

கொழும்பு, மே 05

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் வேட்பாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

களுத்துறை, நாகொடையில் நேற்றிரவு இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்தவர் களுத்துறை - நாகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். காயமடைந்தவர் நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுபவர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# பல்கலை. மாணவன் மரணம்; நான்கு மாணவர்கள் கைது!

கொழும்பு, மே 05

பகிடிவதையால் மாணவன் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 4 மாணவர்களே நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வு துறை நடத்திய விசாரணைகளை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில், சப்ரகமுவ பல்கலைக்கழக இரண்டாம் வருட மாணவன் ஒருவன் பகிடிவதையால் தவறான முடிவு எடுத்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதனிடையே, கைது செய்யப்பட்ட மாணவர்கள் இன்று திங்கட்கிழமை பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மே 05

யாழ்ப்பாணம் - சுண்டுக்குளியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ( யேஐவுயு ) யாழ்ப்பாண பணிமனையில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவினரின் அனுசரணையுடன் இந்த இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் பங்கேற்று குருதிக் கொடை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்...

பல்கலைக்கழகம் ஒன்றை இயக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், அதற்கான சூழல் அங்கு இல்லை என்று கருதப்படுகிறது. எனினும், சுற்றுலாத் துறை விருத்திக்கு அதனைப் பயன்படுத்தவே ஜனாதிபதி விரும்புகிறார்.

ஜனாதிபதி மாளிகைகள் தொடர்பில் ஆராய ஏற்கனவே குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் அடிப்படையில் ஒரு மாதத்துக்குள் இறுதி முடிவு எட்டப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## ஆஸி...

நிபுணரான இவர், கடந்த 2022ஆம் ஆண்டு கோர்ஜெஸ் றிவர் கவுன்சிலராக தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 150 ஆசனங்களைக் கொண்ட அவுஸ்திரேலிய பாராளு மன்றத்தில் அந்தோனி அல்பானீஸி தலைமையிலான தொழில்கட்சி 88 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் அவர் 2ஆவது முறையாக பிரதமராகவுள்ளார். கடந்த 21 ஆண்டு களில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக வென்று ஒருவர் பிரதமராவதும் இதுவே முதல் தடவையாகும்.

இதேநேரம், எதிர்க்கட்சியான லிபரல் கட்சியின் தலைவரான பீற்றர் டட்டன் இந்தத் தேர்தலில் தோல்வியை சந்தித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் மக்களின்...

எம். பி. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

மனிதாபிமான யுத்தம் என்ற போர்வையில் மக்களைக் கொன்று குவித்து அவர்களின் கலாசார அடையாளமாக பேணப்பட்டு வந்த சொத்துகளை இல்லாமல் செய்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கிய பேரினவாத சிந்தனை கொண்ட அரசுகள் தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகளை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் இதுவரை எவ்விதமான கருத்துகளையும் வெளியிடாமல் இருந்திருக்கிறது.

இந்த நிலையில், நகைகளை வன்னி பெருநிலப்பரப்பில் உள்ள வங்கிகளில் அடகு வைத்த மக்கள் தமது நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் தமது முதலீடுகள் அனைத்தையும் இழந்திருப்பதால் பெரும் வறுமையில் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறான நிலைமையில் தற்போதைய அரசு தேர்தல் நலனுக்கானதாக இருந்தாலும் அந்த நகைகள் தொடர்பில் தகவல்களை வெளிக்கொணர்ந்து அதனை வெளிப்படுத்தியமையை வரவேற்கிறேன்.

எனினும், குறித்த நகைகளை உரியவர்கள் இல்லை என்று காரணங்களை காட்டி அரசுடைமையாக்காது நகைகளுக்கு உரித்தான தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இதேவேளை, பொதுமக்களும் தங்களிடம் குறித்த நகைகளை அடகு வைத்த பற்றுச்சீட்டுகள் இருக்கும் பட்சத்தில் அதனை வெளிப்படுத்தி தமது நகைகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கும் முன் வரவேண்டும்.

பற்றுச்சீட்டுகள் உள்ளவர்கள் அதன் பிரதிகளை என்னிடம் வழங்கும் பட்சத்தில் பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரியவர்கள் இந்த நகைகளை பெறுவதற்கு ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியும்.

அத்துடன், அரசாங்கமானது வங்கிகளில் அடகு வைத்த பற்றுச்சீட்டுகள் பல பொது மக்களிடம் இல்லாத நிலை தற்போது காணப்படுகிறது. அது மாத்திரமன்றி அடகு வைத்த பலர் இன்று இயற்கை எய்தியும் உள்ளதால் அவை தொடர்பில் ஏதுவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

எனவே, அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமே தவிர, நகைகளை அரசுடைமையாக்கி தமிழ் மக்களின் சொத்துகளை கபளீகரம் செய்யக்கூடாது - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற 20 குற்றவாளிகளை கைது செய்து நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை!

கொழும்பு, மே 05

நாட்டில் குற்றங்களை செய்து விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற பலரை மீண்டும் கைது செய்து அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டுபாய், இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் தற்போது வசிக்கும் 20இற்கும் மேற்பட்ட குற்றவாளிகளை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வரப்படுவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார். (ஐ)

## இளைஞன் எரித்து கொலை மூன்று சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 05

இளைஞனை குத்தியும் எரித்தும் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கல்கிசை, ஹூலுடகொட பகுதியில் கடந்த வாரம் 23 வயது இளைஞர் ஒருவரின் சடலம் எரிந்த நிலையில் மீட்கப்பட்டது. இவர் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகிறது.

கைதானவர்களில் இருவர் இந்தக் கொலை தொடர்பில் நேரடியாக சம்பந்தப்பட்ட முக்கிய சந்தேகநபர்களாவர். அவர்களிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்திய இரு கத்திகளும் கைப்பற்றப்பட்டன என்று மேல் மாகாண குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 24 மணிநேரத்தில் மட்டும் 22 தேர்தல் விதிகள் மீறல்!

கொழும்பு, மே 05

நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தை மீறியமை தொடர்பில் 22 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில், 3 வன்முறை சம்பவங்களும் உள்ளடங்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காலப்பகுதியில், பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 3 வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## கடத்தப்பட்ட காரிலிருந்து குதித்து தப்பிய மூதாட்டி!

கொழும்பு, மே 05

கடத்தப்பட்டு ஓடிக்கொண்டிருந்த காரிலிருந்து மூதாட்டி ஒருவர் குதித்துத் தப்பியுள்ளார்.

இரத்மலானையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

81 வயது முதியவர் தனது மனைவியுடன் (வயது 76) வங்கிக்கு சென்றுள்ளார். மனைவியை காரில் இருத்தி விட்டு கணவர் வங்கிக்கு சென்றுள்ளார்.

இந்தநிலையில், அங்கு வந்த கார் திருடன் காரை இயக்கி அதனை செலுத்திச் சென்றுள்ளார். கார் கடத்தப்பட்டதை உணர்ந்த மூதாட்டி காரிலிருந்து வெளியே குதித்துள்ளார். அந்தத் திருடன் தன்னை குதிக்க வேண்டாம் என்ற கூறியபோதும், பயத்தில் தான் குதித்தாக பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

கல்கிசை பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

திருடப்பட்ட கார் கொழும்பு நோக்கி சென்றதை கண்டறிந்த பொலிஸார், அந்தக் காரில் வந்தவர் அன்றைய தினம் தெகிவளையில் ஒருவரின் தங்கச் சங்கிலியை பறித்தார் என்றும் கண்டறிந்தனர். (ஐ)

# தமிழக மீனவர்களின் படகுகளை உடைப்பதற்கு இலங்கை திட்டம்!

### பாட்டாளி மக்கள் கட்சி தலைவர்

சென்னை, மே 05

**இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்து வைக்கப்பட்டுள்ள படகுகளில் 34 படகுகளை உடைத்து ஆழ்கடலில் மூழ்கடிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இதனால் தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் செயல்படுத்தவுள்ள இந்த நடவடிக்கையை தாம் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை கடல் பகுதியில் மீன்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் ஆழ்கடலில் செயற்கையான பவளப்பாறைகளை வளர்க்கும் நோக்கில் முதற்கட்டமாக 34 படகுகளை உடைத்து மூழ்கடிப்பதன் மூலம் பவளப்பாறைகளை எளிதாக வளர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக ராமதாஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழக மீனவர்களின் படகுகளை சிதைத்து, அவற்றை ஒருபோதும் கிடைக்கச் செய்யாமல் தடுப்பதன் மூலம் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக ஒழிப்பதே இலங்கை அரசாங்கத்தின் இந்தத் திட்டம்.

எனவே, இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு, தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன், இலங்கை அரசிடம் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்குமாறும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

# இலஞ்சத்தை ஒழிக்கும் நோக்கில் சி.சி.ரீ.வி. கமெரா கண்காணிப்பு

கொழும்பு, மே 05

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள நிறுவனத்துக்குள் ஊழலை ஒழிக்கும் நோக்கில் ஒரு புதிய இலஞ்ச ஒழிப்பு முயற்சியை தொடங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலஞ்சத்துக்கு எதிரான சகிப்புத்தன்மை கொள்கையை வலியுறுத்தும் இந்த முயற்சியின் ஒரு பகுதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வளாகங்களில் சில வாரங்களுக்குள் சி. சி. ரீ. வி. கமெராக்கள் பொருத்தப்படும் - என்று அவர் கூறினார்.

"சில மாதங்களுக்குள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலுள்ள இலஞ்ச புற்று நோயை ஒழிக்க குடிமக்களும் தூய்மையான அதிகாரிகளும் அரசாங்கத்துடன் கைகோத்துப் போராடுவார்கள் என்று நம்புகிறேன்" என்றும் அவர் கூறினார். (ஐ)

## பொலிஸ் உத்தியோகத்தர் மயங்கி விழுந்து மரணம்!

வடமராட்சி, மே 05

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

மாரடைப்பு காரணமாக நேற்று காலை அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட் டது. அநுராதபுரத்தை சேர்ந்த 49 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

உள்ளூராட்சி தேர்தல் கட மைக்கு புறப்படுவதற்கு தயா ரானபோது பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலருடன் அநுர சந்திப்பு



கொழும்பு, மே 05

வியட்நாமுக்கு அரச பயணமாக சென்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று ஞாயிற்றுக்கிழமை ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தலைமையகத்தில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை சந்தித்து கலந்துரையாடினார்.

வியட்நாம் இலங்கைக்கு இடையிலான 55 ஆண்டு கால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டார். (ஐ)

## சிறுமியை தகாத முறைக்கு உட்படுத்திய வேட்பாளர் கைது!

கொழும்பு, மே 05

சிறுமி ஒருவரை தகாத முறைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை - பசறை பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட் பாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

14 வயதுடைய சிறுமியை தகாதமுறைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, மே 05

எதிரெதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அவிசாவளையிலிருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்து அவிசாவளைக்கும் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் பாதுாக்க - கலகெதர பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், 20 வயது இளைஞர் படுகாயமடைந்தார். ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார். (ஐ)

## உள்ளூராட்சி சபை தேர்தல் 4,150 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, மே 05

நாளைய தினம் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் வரை 4 ஆயிரத்து 150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் சட்ட திட்டங்களை மீறியமை தொடர்பிலான இந்த முறைப்பாடுகள் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் பதிவாகின என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிடைத்த முறைப்பாடுகளில், 3 ஆயிரத்து 495 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 655 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org